சார்பு நீதிமன்றம் மன்னார்குடி

முன்னிலை:- S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி, மன்னார்குடி

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் மாசி மாதம் 28 ம் தேதி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் தேதி

**அசல் வழக்கு எண்.33/2015**

**CNRNo.TNTV05-000209-2015**

அருண்மொழி ...... வாதி

(Amended as per order in
I. A.No.314/2016, dated 21.02.2017)

//எதிர் //

1. அம்பிகாஅம்மாள்
2. சிவகலை
3. மோகன்தாஸ்
4. யோகானந்தம்
5. செந்தமிழ்செல்வி
6. ஹேமாவதி
7. சித்ரகலா.
8. நந்தினி (எ) செந்தில்குமாரி
9. பேபி
10. ரேவேந்திரன்'
11. ரேஷ்மா ........ பிரதிவாதிகள்

பிரதான அசல் வழக்கானது என் முன்பு கடந்த 17.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் அவர்களும் 1ம், 3ம் 4ம் மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன் அவர்களும் 5ம், 7ம் மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கலையரசன் அவர்களும், 6ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R. S.ஜெயசங்கர் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் பிரதிவாதியை பொருத்தமட்டில் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலினையில் இருந்து வந்து ஆவணங்கள் சாட்சிகளை பார்வையிட்டு இன்று (12.02.2026)இந்த நீதிமன்றம் வழங்கும்....

## <u>தீர்ப்புரை</u>

வாதி இந்த வழக்கை பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

2). **<u>வாதி தரப்பில் வழக்குரை சுருக்கம்</u>**:-

வழக்கு சொத்துக்கள் மாரியப்ப வள்ளாள தேவர் அவர்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி மாரியப்ப வள்ளாள தேவருக்கு 1ம் பிரதிவாதி முதல் மனைவி என்றும், பிச்சைமணி இரண்டாவது மனைவி என்றும், மேற்படி மாரியப்பன் வள்ளாள தேவர் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றி சுதந்திரப் போராட்ட வீரர் என்ற முறையில் ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றும், காலஞ்சென்ற மாரியப்ப வள்ளால தேவருடைய முதல் மனைவி உயிருடன் இருக்கும்பொழுதே பிச்சைமணியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றும் , இந்த 2 வது திருமணம் சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லாத காரணத்தால் 2 வது மனைவியைப் பொறுத்து எந்தவித பரிகாரமும் கேட்காமல் அவரது வாரிசுகளைப் பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், காலஞ்சென்ற மாரியப்ப வள்ளால தேவருக்கு முதல் மனைவி அம்பிகா அம்மாள் மூலம் 2ம் பிரதிவாதி சிவகலை, ஜான்சிராணி, 3ம் பிரதிவாதி மோகன்தாஸ், 4ம் பிரதிவாதி யோகானந்தம் ஆகியோர்கள் ஆண், பெண் வாரிசுகள் ஆவார்கள். 2 வது மனைவி பிச்சைமணி மூலம் வாதி அருண்மொழி, 9ம் பிரதிவாதியின் கணவர் ரவீந்திரன், 5ம் 6ம் பிரதிவாதிகளான செந்தமிழ்செல்வி, ஹேமாவதி மற்றும் ரெத்தினகுமார். 7ம், 8ம் பிரதிவாதிகளான சித்ரகலா, நந்தினி ஆகியோர் ஆண், பெண் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இதில் முதல் மனைவி அம்பிகா அம்மாள்

மூலம் பிறந்த ஜான்சிராணி திருமணமாகாமல் 2007 ம் ஆண்டில் காலமாகி விட்டார் என்றும் , 2 வது மனைவி பிச்சைமணி மூலம் பிறந்த ரவீந்திரன் 2010 ம் ஆண்டில் காலமாகி விட்டார். 9 ம் பிரதிவாதி பேபி மற்றும் 10 ம் மற்றும் 11 ம் பிரதிவாதிகளான ரேவேந்திரன், ரேஷ்மா ஆகியோர்கள் மகன் மற்றும் மகள் ஆவார்கள் என்றும், மாரியப்ப வள்ளாலதேவரின் 2 வது மனைவி பிச்சைமணி மூலம் பிறந்த ரெத்தினகுமார் திருமணமாகாமல் 2011 ம் ஆண்டில் காலமாகிவிட்டார் என்றும், தாவா சொத்துக்கள் அனைத்தும் காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாலதேவருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும் ,மேலும் அவர் மாதம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) வீதம் சுதந்திர போராட்ட வீரர் என்ற முறையில் ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றும், அவர் இறந்த தேதியில் அவரது வங்கி கணக்கில் ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் ) சேமிப்பாக வைத்திருந்தார். அவை குறித்து வாதி தனி நடவடிக்கை எடுக்க ரிசர்வ் செய்து கொள்கிறார் என்றும், மேலும் அவர் தாவாவில் கண்ட சொத்தைத் தவிர குத்தகை நிலங்களும் 15 மா வைத்திருந்தார். அதை குறித்து வாதி தனி நடவடிக்கை எடுக்க ரிசர்வ் செய்து கொள்கிறார். இவை அனைத்தும் வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு சொந்தமான பிரிபடாத பொதுக்குடும்ப சொத்துக்களாகும். காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாலதேவர் தனது குடும்பச் சொத்தைப் பொறுத்து எந்தவித எழுத்துமூலமான ஏற்பாடுகளும் செய்து வைக்காமல் காலமாகி விட்டார் என்றும், காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாலதேவர் விட்டுச் சென்ற சொத்துக்களை வாதி, பிரதிவாதிகள் பிரிவினை செய்து கொள்ளாமல் பொதுவில் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும் , ஆண் வாரிசுகளான ரவீந்திரன், மோகன்தாஸ் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு சொத்துக்கள் தங்களுக்கு தனிப்பட்ட சொத்து என்பது போல காட்டிக்கொண்டு பட்டா பெற்றுள்ளார்கள் என்றும், காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாலதேவர் விட்டுச்சென்ற சொத்துக்கள் யாவும் வாரிசுகளான மோகன்தாஸ், அம்பிகாஅம்மாள், மாரியப்ப வள்ளாலதேவர், பிச்சைமணி

அம்மாள், சண்முகவள்ளி ஆகியோர் பெயர்களில் தனித்தனியாக பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றும் ,அவை பல பெயர்களில் இருந்தாலும் அவை யாவும் பிரிபடாத பொதுக் குடும்ப சொத்துக்கள் ஆகும். வாதிக்கு தாவா சொத்தில் 1/10 பாத வீதம் உரிமை உள்ளதாகவும்,வாதி பலமுறை சுமுகமான பாகப்பிரிவினைக்கு கேட்டுக்கொண்டும் பிரதிவாதிகள் பாகப்பிரிவினைக்கு மறுத்து விட்ட காரணத்தால் வாதி கடந்த 27.02.2015 ம் தேதியன்று ஒரு அறிவிப்பு அனுப்பி தாவா சொத்தில் தனக்கு சேர வேண்டிய 1/10 பாக வீதத்தை பிரிவினை செய்து தருமாறு அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், இதன்காரணமாக வாதி தனக்கு சேர வேண்டிய பிரிபடாத 1/10 பாகத்தை பிரிவினை செய்து தரக்கோரியும், தனிச்சுவாதீனம் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

3). <u>3 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 1ம், 4ம் மற்றும் 9 முதல் 11 வரையுள்ள பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்</u>:-

வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படியும், நியாயப்படியும், உண்மை நிலவரங்கள்படியும் நிலைநிற்கதகுந்ததல்ல என்றும், வாதியின் வழக்குரையில் காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாள தேவர் விட்டுச்சென்ற சொத்துக்களை பொறுத்து எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படாதது போல் சொல்லியுள்ள விவரங்கள் யாவும் வாதியின் வழக்குரை தோதிற்காக கற்பனையாக, உண்மைக்கு புறம்பாக சொல்லப்பட்டவையாகும் என்றும், மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருந்த காலத்திலேயே கடந்த 1986 ம் ஆண்டு வாக்கில் சொத்துக்கள் யாவும் வாய்மொழியாக பிரிவினை செய்து கொள்ளப்பட்டு அதனடிப்படையில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மாரியப்ப வள்ளாள தேவரின் மனைவி இந்த 1ம் பிரதிவாதி அம்பிகா அம்மாள் ஆவார். மேற்படி அம்பிகா அம்மாள் மூலம்

பிறந்தவர்கள்தான் இந்த வழக்குரையில் கண்டுள்ள 2ம் பிரதிவாதியான சிவகலை, 3ம் பிரதிவாதியான மோகன்தாஸ், 4ம் பிரதிவாதியான யோகானந்தம் மற்றும் ஜான்சிராணி என்கிற லெட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள் என்றும், வாதியின் வழக்குரையில் ஜான்சிராணி என்கிற லெட்சுமி திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும் எனவும், மேற்படி ஜான்சிராணி என்பவர் சிவாஜி என்பவரை திருமணம் செய்துகொண்டு மேற்படி தம்பதியினருக்கு சிவமதி என்கிற மகள் உள்ளார் எனவும், ஜான்சிராணி காலமான பின்னர் அவரது வாரிசுதாரர்களாக அவரது மகள் சிவமதியும் அவரது கணவரான சிவாஜியும் வாரிசுதாரர்களாக உள்ள நிலையில் அவரை வாரிசாக சேர்க்காமல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா Non joinder of Necessary Parties என்பதன் அடிப்படையில் முதலெடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டியதாக உள்ளது என்றும், மாரியப்ப வள்ளாள தேவரின் மனைவியான அம்பிகா அம்மாள் உயிருடன் இருக்கும்போது பிச்சைமணி என்பவருடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தினாலும் மேற்படி பிச்சைமணி என்பவருக்கு மனைவி என்ற அந்தஸ்து கிடையாது. அவர் வாரிசுதாரர் என்ற உரிமையும் கோரமுடியாது. மாரியப்பவள்ளாள தேவருக்கும் பிச்சைமணிக்கும் பிறந்தவர்கள்தான் செந்தில்குமாரி என்கிற நந்தினி, வாதியான அருண்மொழி, ரவீந்திரன், செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, சித்ரகலா, ரத்தினகுமார் ஆகியோர்கள் ஆவார்கள் என்றும் மேற்படி நபர்களில் ரவீந்திரன் என்பவர் திருமணமாகி இறந்துவிட்டார் என்றும் , அவருக்கு அவரது மனைவியான பேபியும், ரேஷ்மா என்கிற மகளும், ரேவேந்திரன் என்கிற மகனும், சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேலும், ரத்தினகுமார் என்பவரும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றும், மாரியப்ப வள்ளாள தேவர் உயிரோடு இருந்த காலத்தில் கடந்த 1986ம் ஆண்டில் மாரியப்ப தேவருக்கும். அவரது மகன்கள் மற்றும் மகள்கள் மற்றும் அம்பிகா அம்மாள்

ஆகியோர்களுக்கிடையே மாரியப்ப தேவருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து வாய்மொழியாக பஞ்சாயத்தார்கள் மற்றும் குடும்ப முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சொத்துக்கள் பிரிவினை செய்து கொள்ளப்பட்டு அவ்வாறு பிரிவினை செய்து கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சொத்துக்கள் தனித்தனி பட்டா ஏற்பட்டு அதனடிப்படையில் அவரவர்களது அனுபவத்தில் விடப்பட்டது. அவ்வாறு பிரிவினை செய்துகொள்ளும்போது மாரியப்ப வள்ளாள தேவரின் பெண்களான வாதி அருண்மொழி மற்றும் ஜான்சிராணி என்கிற லெட்சுமி, சிவகலை, செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, சித்ரகலா, செந்தில்குமாரி (எ) நந்தினி ஆகியோர்களுக்கு சித்தமல்லி கிராமத்தில் உள்ள பட்டா எண்.769-ல் உள்ள சொத்துக்களான சர்வே எண்.484/1பி-ல் உள்ள 1 ஹெக்டேர் 38 ஏர்ஸ் மேற்படி 7 நபர்களுக்கும் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் ,அவ்வாறு மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருக்கும்போது 1986 ம் ஆண்டில் பிரிவினை செய்து கொள்ளப்பட்ட காலத்தில் மோகன்தாஸ், யோகானந்தம், ரவீந்திரன், ரெத்தினக்குமார் ஆகியோர்களுக்கும் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட காலத்திலேயே சொத்துக்கள் தனித்தனியாக பிரிவினை செய்து கொடுக்கப்பட்டது என்றும், வாதி மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகளின் தகப்பனாரான மாரியப்ப வள்ளாள தேவர் கடந்த 2008 ம் ஆண்டில் காலமாவதற்கு முன்பு கடந்த 2006 ஆம் ஆண்டில் எழுதிவைக்கப்பட்டுளள் உயிலின்படி பாகப்பிரிவினை செய்துகொண்ட காலத்தில் அவர் பெயருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவரது மூத்த குமாரரான மோகன்தாஸ் அடைந்து கொள்வதற்கும் மற்றும் அப்பொழுது திருமணம் ஆகாமல் இருந்த யோகானந்தம் மற்றும் ரத்தினகுமார் ஆகியோர்களுக்கும் மற்றும் செந்தில்குமாரி என்கிற நந்தினிக்கும் திருமணம் செய்துவைக்க வேண்டிய பொறுப்பை மோகன்தாஸ் அவர்களிடம் ஒப்படைத்து மாரியப்ப வள்ளாள தேவரால் ஒரு உயில் 2006 ஆம் ஆண்டில் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றும்,

மாரியப்ப வள்ளாள தேவர் காலமான பின்னர் மேற்படி உயில் நடைமுறைக்கு வந்து மாரியப்பவள்ளாள தேவர் விட்டுச்சென்ற சொத்துக்கள் யாவும் மேற்படி மோகன்தாஸ் அவர்களின் உரிமையிலும். அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், மேலும், வாதியின் வழக்குரையில் காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருக்கும்போது எவ்வித ஏற்பாடும் செய்துவைக்காமல் காலமாகிவிட்டார் என்று சொல்லியுள்ளதும். மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருந்தபோது அவர் குடும்பத்தில் எவ்வித பாகப்பிரிவினையும் செய்து கொள்ளப்படவில்லை என்று சொல்லியுள்ளதும் தவறு என்றும், அவைகள் யாவும் வாதியின் வழக்குரையின் தோதிற்காக கற்பனையாக உண்மைக்கு புறம்பாக சொல்லப்பட்டுள்ளது என்றும் வாதி மற்றும் சிவகலை, ஜான்சிராணி, செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, சித்ரகலா, செந்தில்குமாரி என்கிற நந்தினி ஆகியோர்களுக்கு பிரிவினை செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் இந்த வழக்குரையில் சொத்துக்கள் 3ம் பிரதிவாதி மோகன்தாஸ் அவர்களின் குத்தகை சாகுபடியில் இருந்து வருகிறது என்றும் , உண்மை விபரங்கள் அனைத்தும் மறைத்து பாகப்பிரிவினை ஏற்படாதது போல ஒரு தோற்றத்தை உருவாக்கி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையில் 3ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான அறிவிப்பும் வழக்கிற்கு முன்னர் வாதி அனுப்பவில்லை என்றும், வாதி தகப்பனார் ரூ.7,00,000/-ம் சேமிப்பாக வைத்திருந்தார் என்பதும் வழக்கு சொத்துக்களை தவிர 15 மாநிலம் குத்தகை சாகுபடியில் வைத்திருந்தார் என்பதும் மாரியப்ப வெள்ளாளர் தேவருக்கு சொந்தமில்லாத சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், வாதிக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4). 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 5 மற்றும் 8 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்:-**

இந்த 7ம் பிரதிவாதியின் தகப்பனார் மாரியப்ப வள்ளாளதேவர் 2008 ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார் என்பது உண்மை. அவருக்கு அம்பிகா, பிச்சைமணி ஆகிய இரு மனைவியர் என்பது உண்மை. இந்த 7ம் பிரதிவாதியின் தாயார் சுமார் 5 ஆண்டுகள் முன்பு காலமாகிவிட்டார். அவரது தாயாருக்கு வாதி அருண்மொழி, ரவிச்சந்திரன், செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, ரெத்தினகுமார் மற்றும் இந்த 7ம் பிரதிவாதி, நந்தினி ஆகியோர் ஆண், பெண் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இந்த 7ம் பிரதிவாதியின் பெற்றோர் விட்டுச்சென்ற சொத்துக்களில் எந்தவித பாகப்பிரிவினையும் இதுவரை நடைபெறவில்லை என்றும், இந்த பிரதிவாதியின் தகப்பனார் அவர் இறந்த தேதியில் ரூ.7,00,000/- வங்கியில் சேமிப்பாக வைத்திருந்தார் என்றும், அவர் எழுத்து மூலமாக எந்த ஒரு ஆவணமும் தன் வாரிசுகளுக்கு எழுதி வைக்கவில்லை என்றும், இந்த பிரதிவாதியின் தகப்பனாரை கர்த்தாவாக கொண்ட கூட்டுக்குடும்பத்தில் அவர் பெயரிலும், பிரதிவாதியின் சகோதரர் மோகன்தாஸ் மற்றும் பெரியம்மா அம்பிகா மற்றும் தாயார் பிச்சைமணி மற்றும் சண்முகவல்லி ஆகியோர் பெயர்களிலும் பல பட்டாக்கள் கொடுக்கப்பட்டு இருந்து வருகிறது என்றும், அவைகள் யாவும் பிரிபடாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் எனவும், இந்த 7ம் பிரதிவாதிக்கும் வாதியைப்போல வழக்கு சொத்தில் பிரிபடாத 1/10 பாகவீதம் உரிமை உள்ளது என்றும், இந்த பிரதிவாதியும் இதர சகோதரர்கள் மற்றும் உடன்பிறந்த சகோதரர்களிடம் சுமுகமான பாகப்பிரிவினை செய்து தரும்படி கேட்டும் பிரித்துக் கொடுக்க மறுக்கிறார்கள் என்றும் , இந்த 5ம், 7ம் மற்றும் 8ம் பிரதிவாதிகளுக்கும் வழக்கில் தலா 1/10 பாகம் உள்ளது என்றும், அதை பொறுத்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5). <u>வாதியின் வழக்குரை பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் இரண்டையும் பரிசீலித்து இந்த நீதிமன்றம் பின்வருமாறு எழுவினாக்கள் வனைந்துள்ளது</u>.**

1. தாவா சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என வாதி கூறியிருப்பது சரியா?

2. மாரியப்ப வள்ளால தேவர் 1986 ம் ஆண்டு உயிருடன் இருக்கும் போது வாய்மொழியாக பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என 3 ம் பிரதிவாதி கூறியிருப்பது சரியா?

3. ஜான்சிராணி வாரிசுகளை சேர்க்கவில்லை என்பதால் வழக்கு வாதிக்கப்பட்டுள்ளது என 3 ம் பிரதிவாதி கூறியிருப்பது சரியா?

4. 2006 ம் ஆண்டில் மாரியப்ப வள்ளால தேவர் உயில் எழுதி வைத்துள்ளார் என 3 ம் பிரதிவாதி கூறுவது சரியா?

5. 1ம் மற்றும் 2ம் மற்றும் 25 வது இனச்சொத்துகள் மாரியப்ப வள்ளால தேவருக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லை என 3 ம் பிரதிவாதி கூறியிருப்பது சரியா?

6. வாதி கோரியுள்ள 1/10 பாகம் வாதிக்கு கிடைக்கத் தக்கதா?

7. வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

**6).** வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின் போது இந்த வழக்கானது வாதியால் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தகப்பனார் தான் மாரியப்பன் என்றும், அவர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றும், வழக்கு சொத்துக்கள் மாரியப்பன் சொத்துக்கள் என்பதிலும் வாதி பிரதிவாதிகள் உறவு முறைகள் குறித்து எந்த விதமான மறுப்பும் இல்லை என்றும், வழக்கு சொத்துக்களை பொருத்தமட்டில் இந்த வாதிக்கு என்ன பரிகாரம் உள்ளதோ அதை பொருத்தமட்டில் அவர் தீர்ப்பாணை தகுதி உடையவர் என்றும், அவசிய தரப்பினர்கள் சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றும், வாதி சட்டப்படியான பாகத்தை பெற தகுதியுடையவர் என்று தீர்மானிக்கும் நிலையில் அதை பொறுத்து தீர்ப்பை வழங்கலாம் என்றும், வழக்கு சொத்துக்களை பொறுத்து மாரியப்பன் எழுதிவைத்த உயில் நிரூபணம்

செய்யப்படவில்லை என்றும், அந்த உயிலை பொறுத்து குறிப்பாக எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்படவில்லை என்றும் , எதிர்வழக்குரையில் வாதியின் வழக்குரையை குறிப்பாக அருதியிட்டு மறுத்து சாட்டுரைகள் செய்யப்பட வேண்டும் என்றும், ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு உறுதியாக மறுத்து எந்த மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை என்றும் , எனவே இந்த வழக்கில் வாதி கேட்டவாறு தீர்ப்பு, தீர்ப்பாணை வழங்க வேண்டும் என்றும் வாதுரை செய்தார்.

**7).** 5 ம்,7 ம் மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் வாதிகள் வழக்கில் கேட்டவாறு தீர்ப்பாணை பிறப்பிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், அதே நேரத்தில் இந்த பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்தில் பிரிவின்றி தலா 1/10 பாகம் உள்ளது என்றும், அதற்கான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், வாதிக்கு வழங்கப்படும் தீர்ப்பாணை போலவே இந்த பிரதிவாதிகளுக்கும் தீர்ப்பாணை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்து வாதுரை செய்தார்.

**8)** 1 ம், 3 ம் , 4 ம் மற்றும் , 9 முதல் 11 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின் போது இந்த வழக்கானது பல உண்மை சம்பவம் சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிச்சைமணி மாரியப்பனின் இரண்டாவது மனைவி என்றும், இந்த வாதி இரண்டாவது மனைவியின் மகள் என்றும் , ஜான்சி ராணி என்ற ஒரு வாரிசு இருந்து அவருக்கு சிவமதி என்ற மகளும் சிவாஜி என்ற கணவரும் உள்ளனர் என்றும், ஆனால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேற்படி மாரியப்பன் இரண்டு மனைவிகள் பத்து குழந்தைகள் என்று இருந்த நிலையில் வீண் பிரச்சனைகள் ஏதேனும் ஏற்பட்டு

விடக்கூடாது என்று தான் உயிருடன் இருந்த காலத்திலேயே சொத்துக்களை பொறுத்து வாய்மொழியாகத்திற்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்தப் பாகத்தை அனுசரித்து பட்டாவும் அந்த பாகம் பெற்ற நபர்கள் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு அயிட்ட சொத்துக்கள் 1ம் மற்றும் 2ம் மற்றும் 25 ஆகியவை மாரியப்ப வள்ளாளருக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லை என்றும், அவை ஸ்ரீராம் மற்றும் மாணிக்கம் என்பவருடைய பெயர்களில் இருக்கிறது என்றும், வழக்கில் சொத்துக்களில் வாதி, பிரதிவாதிகளுக்கு தொடர்பு இல்லாத சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் , பட்டா எண்.497 வரக்கூடிய சொத்துக்களும் பட்டா எண்.722-ல் காணப்படும் சொத்துக்களும் ரெத்தின தேவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதை பொறுத்து பாகம் கேட்பதாக இருந்தால் ரெத்தினகுமாருடைய வாரிசுகளான இந்த வாதியும் அவருடன் உடன் பிறந்த நபர்களும்தான் கேட்க வேண்டும் என்றும், எல்லா சொத்துக்களையும் குறிப்பிட்டு கேட்க முடியாது என்றும், இந்த 3ம் பிரதிவாதி பெயருக்கு மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருக்கும் போது நல்ல சுயமான சிந்தனையோடு யாருடைய தூண்டுதலும் இன்றி ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த உயில் இந்த 3ம் பிரதிவாதியால் வழக்கில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்து வாதுரை செய்தார்.

9) இந்த வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வேறு எந்த சாட்சிகளும் விசாரணை செய்யப்படவில்லை. அதேபோல 1ம் மற்றும் 4 ம் மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.12 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.2 ஆக சுப்ரமணியன் என்பவர் விசாரணை

செய்யப்பட்டுள்ளார். 5ம், 7ம் மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில் வேறு எந்த சாட்சிகளும் விசாரணை செய்யப்படவில்லை.

**10)** இந்த வழக்கில் கண்ட இதே வாதியால் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மன்னார்குடியில் இவ்வழக்கில் கண்ட தரப்பினர்களான 3ம், 4ம் மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.76/2017 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கானது நிலுவையில் இருந்து வரும்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் Tr. O. P. No. 33 of 2017 என்ற மனுவை தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இந்த நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.128/2021 ஆக வழக்கு எண் கொடுக்கப்பட்டது. இரண்டு வழக்குகளையும் இணைத்து நடத்த வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இரண்டு வழக்கையும் இணைந்து நடத்த உபய தரப்பினர்கள் முன்வரவில்லை. மேலும் அது தொடர்பாக இந்த வழக்கில் அசல் வழக்கு எண்.128/2021-ல் கண்ட வாதி அழைத்தபோது அவர் வழக்கில் ஆஜராகவில்லை. மேலும் இரண்டு வழக்குகளிலும் ஏற்கனவே தனித்தனியாக சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை முடிந்திருந்த நிலையில் தனித்தனியாக தீர்ப்பு வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**11) <u>எழுவினா 3:-</u>**

**11.1)** இந்த வழக்கில் அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா? என்று முதலில் முடிவு செய்ய வேண்டி உள்ளது. ஜான்சி ராணி என்பவருடைய வாரிசுகள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்பது 3ம் பிரதிவாதி தரப்பு வாதமாகும். இந்த வாதியை குறுக்கு விசாரணை செய்கின்றபோது ஜான்சி ராணி என்ற மகள் இருந்தார் என்றால் சரிதான் என்று கூறியுள்ளார். ஆனால் மேற்படி ஜான்சி ராணி

சிவாஜி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் இல்லை என்றும், அவருக்கு சிவமதி என்ற பெண் குழந்தை உள்ளது என்றால் அது பற்றி தெரியாது என்றும், வாதி சாட்சி அளித்துள்ளார். ஒரு பிரிவினை வழக்கில், ஆதாரத்தின் சுமையின் விதி முக்கியமானது. வா.சா.1 இந்த வழக்கில் குறுக்கு விசாரணையில் மற்றொரு சகோதரி ஜான்சி ராணி இருந்தார், இந்த வழக்கில் அவர் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும் அவர் இறந்துவிட்டார் என்றும் கூறியுள்ளார். எனவே ஜான்சி ராணியின் மரணம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஜான்சி ராணியின் கணவர் சிவாஜி மற்றும் மகள் சிவமதி என்பதை மட்டுமே வா.சா.1 மறுக்கிறார். எனவே, ஜான்சி ராணியின் சட்டப்பூர்வ வாரிசுகள் யார்? என்பது மட்டுமே பிரச்சனை .

**11.2)** இந்திய சாட்சியச் சட்டம், 1872 பிரிவு 101-103 இன் கீழ்: ஒரு உண்மையை வலியுறுத்தும் நபர் அதை நிரூபிக்க வேண்டும். இந்த வழக்கில் கணவர் சிவாஜி மற்றும் மகள் சிவமதியை விட்டு ஜான்சி ராணி இறந்துவிட்டார் என்று பிரதிவாதி வாதிட்டால், நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதியிடம் உள்ளது: ஜான்சி ராணி சிவாஜியை மணந்தார். அவர்களுக்கு ஒரு மகள் சிவமதி இருக்கிறார். அவர்கள் சட்டப்பூர்வ வாரிசுகள் என்று கூறும் 3 ம் பிரதிவாதி ஜான்சி ராணியின் சட்ட வாரிசு சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்று, வாக்காளர் ஐடி / ஆதார் / ரேஷன் கார்டு, இதை நிரூபிக்க முடியும். ஜான்சி ராணி இருந்தார் என்றும், இணை பங்குதாரராக இருந்தார் என்றும் ,நிரூபிக்கப்பட்டால், ஆனால் அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால், வழக்கு பாதிக்கப்படலாம்: தேவையான கட்சிகளின் இணைப்பு இல்லாதது அனைத்து இணை பங்குதாரர்களும் இல்லாத ஒரு பிரிவினை வழக்கு பராமரிக்கப்படாது.

**11.3)** சிவாஜி மற்றும் சிவமதி ஆகியோர் வாரிசுகள் என்று பிரதிவாதி நிரூபித்தால் தேவையான கட்சிகளின் இணைப்பு இல்லாததற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்

அல்லது நீதிமன்றம் அவர்களை ஈடுபடுத்த உத்தரவிடலாம். பிரதிவாதி வாரிசுகளை நிரூபிக்கத் தவறினால் நீதிமன்றம் கிடைக்கக்கூடிய தரப்பினருடன் தொடரலாம், ஆனால் பொதுவாக நீதிமன்றம் இறந்த இணை பங்குதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகளை வலியுறுத்துகிறது. சிவாஜி மற்றும் சிவமதி ஆகியோர் ஜான்சி ராணியின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்று வலியுறுத்தும் பிரதிவாதியின் மீதுதான் சுமை உள்ளது. மேற்படி ஜான்சி ராணியை பொறுத்து குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட அந்த ஒரு வார்த்தையை தவிர பின்னிட்டு இந்த பிரதிவாதிகள் எந்தவிதமான நிரூபணமும் செய்யவில்லை. சிவாஜி என்பவர் தன் தரப்பில் சாட்சியாக விசாரித்திருக்கலாம் அல்லது சிவமதி என்பவரையும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்திருக்கலாம். ஆனால் அதற்கான எந்த முயற்சியும் எடுக்காமல் பிரதிவாதிகள் இருந்துள்ளது அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு இந்த வழக்கு உள்ளாகிறது என்ற வாதத்தை நிராகரிக்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12). <u>எழுவினா 2:-</u>

மேற்கண்ட எழுவினா அடிப்படையில் மாரியப்ப வள்ளாளதேவர் உயிருடன் இருக்கும்போதே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது அதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என கூறியிருப்பது உண்மையா? என்று பார்க்க வேண்டி உள்ளது. இந்த பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் சிட்டா மற்றும் அடங்கல் ஆகும். இந்த வாதி வழக்கில் சொல்லி உள்ள சொத்து விவரங்களை பார்வையிடும் போது மொத்தம் 25 ஐட்ட சொத்துக்களை வழக்கில் கூறியுள்ளார். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, 88 சித்தமல்லி கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்கள் என குறிப்பிட்டு பின்வரும் சொத்துக்களை கூறியுள்ளார்.

1.) 211/5 ல் புஞ்சை 0.04.5 ஏர்ஸ் 2). 378/5 ஏ ல் மனை 0.09.5 3.) 478/1 ல் நஞ்சை 0.67.5 ஏர்ஸ்

4.)478/2 ல் நஞ்சை 0.69.5 ஏர்ஸ் 5). 479/1 ல் நஞ்சை 0.94.5 ஏர்ஸ்

6).479/2 ல் நஞ்சை 0.92.0 ஏர்ஸ் 7.)480/2 ஏல்நஞ்சை 0.16.5 ஏர்ஸ்

8.) 483/2 ஏ ல் புஞ்சை 0.03.5 ஏர்ஸ் 9. )484/1 ஏ ல் நஞ்சை 0.38.0 ஏர்ஸ்

10.)484/1 பி ல் நஞ்சை 1.38.0 ஏர்ஸ் 11.)484/1 சி ல் நஞ்சை 0.30.0 ஏர்ஸ்

12.)486/3 ஏ ல் நஞ்சைஸ 0.26.0 ஏர்ஸ் 13. )486/3 பி ல் நஞ்சை 0.28.0 ஏர்ஸ்

14.) 486/5 ஏ 1 ல் மனை 0.02.0 ஏர்ஸ் 15.)486/59 பி 1 ல் நஞ்சை 0.04.0 ஏர்ஸ்

16.)486/5 பில் நஞ்சை 0.56.0 ஏர்ஸ் 17.)487/1 ஏ ல் நஞ்சை 0.35.0 ஏர்ஸ்

18.)487/19 சி ல் நஞ்சை 0.03.0 ஏர்ஸ் 19. )487/1 பி ல் மனை 0.21.0 ஏர்ஸ்

20.)487/3 ஏ ல் நஞ்சை 0.46.0 ஏர்ஸ் 21.)487/39 பி ல்மனை 0.13.0 ஏர்ஸ்

22.)487/3 சி ல் நஞ்சை 0.02.0 ஏர்ஸ் 23.)487/3 டி ல் மனை 0.02.5 ஏர்ஸ்

24).489/3 ல் நஞ்சை 0.21.0 ஏர்ஸ் 25.)585/11 ஈ ல் மனை 0.00.5 ஏர்ஸ் ஆகியன ஆகும்.

**13).** இதில் வா.சா.ஆ.1 வழக்கு ஐட்ட சொத்தான சர்வே எண் 4841b. அந்த சொத்துக்கள் இந்த வழக்கில் கண்ட வாதி அருண்மொழி, 2 ம் பிரதிவாதி சிவகலை, 5 ம் பிரதிவாதி செந்தமிழ் செல்வி, 7 ம் பிரதிவாதி சித்ரகலா,6 ம் பிரதிவாதி ஹேமாவதி ஆகியோர்கள் பெயரில் உள்ளது. அதேபோல வா.சா.ஆ.2 மேற்சொன்ன சர்வே எண்களுக்குரிய பசலி ஆகும். அதுவும் மேற்சொன்ன நபர்கள் பெயரில் காணப்படுகிறது. வழக்கு ஐட்ட சொத்தான 3 மற்றும் 13 ம் 3 ம் பிரதிவாதி பெயரில் காணப்படுகிறது. வழக்கு அயிட்ட நம்பர் 9 ரத்தினகுமார் பேரில் உள்ளது. மாரியப்பன் வள்ளாளர் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொடுத்து அதன் அடிப்படையில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பது 3 ம் பிரதிவாதி தரப்பு வாதமாகும். அதேபோல 1 வது ஐட்ட சொத்துக்களும், 2 வது அட்ட சொத்துக்களும், 25 வது ஐட்ட சொத்துகளும் மாரியப்பனுக்குரிய சொத்துக்கள் இல்லை என்று கூறியுள்ளார். அந்த சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. பொதுவாக வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்று கூறும் 3 ம் பிரதிவாதி அந்த

**வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு அவரவர் பாகத்திற்கு சொத்துக்களை எடுத்து அனுபவித்து வந்தோம் என்பதை நிரூபிக்கும் சுமையை அவரே கொண்டவர் ஆவார். எவர் ஒருவர் வாய்மொழி நடந்து விட்டது என்று முன்னிலைப்படுத்துகிறாரோ அதை அவர் தான் நிரூபணம் செய்ய வேண்டும்.**

**13.1).** *Property disputes form a major percentage of the total civil cases filed/pending before the Trial Courts in the country. The most common among them are the disputes arising between family members, primarily concerned with division/ partition of shares in cases of intestate succession. Although the Hindu Succession Act, 1956 provides elaborate and detailed provisions for devolution of properties in cases of intestate succession, it is often seen that parties resort to the plea of 'oral partition' to somehow defeat the rights of their adversaries (family members). This is done by setting up a case/ defence wherein, an oral partition is alleged to have been effected prior in time between the family members, and shares in the property are prayed to be determined in terms of the oral partition and not as per the provisions of the Hindu Succession Act, 1956.*

*This plea of 'oral partition' is cleverly engineered by unscrupulous litigants to support and prolong false and vexatious civil suits. A litigant resorting to such a plea knows fully well that such a plea inevitably requires recording of evidence, both documentary and oral. A plea of oral partition may be proved by either deposing the beneficiary of such partition or those acquainted with the same which generally involves, friends and other relatives. In appropriate cases, even the revenue records are relied upon to support the plea of oral partition. Hence, by taking shelter under the plea of 'oral partition', a civil suit, bereft of any merit whatsoever, is subjected to the rigors of a full-fledged trial thereby, subjecting innocent parties to the judicial process.*

*Plea of 'oral partition' is also often used to defeat title in properties owned by a person in their name, though used as a common residence by all the family members. In such cases, the plaint is cleverly drafted with an averment that the property was purchased out of the family funds of the parents of the parties, but the same came to be registered in the name of one individual son/ daughter only out of love and affection. The factum of common residence further gives credence to such an averment and Courts are prima facie convinced as to the factum of an oral partition. Since property transactions generally date*

*back to the 1900s, there is almost no proof of any payment whatsoever, and as such Courts tend to regard such properties to be purchased out of joint funds, though registered in an individual name. As these disputed questions of facts coupled with the plea of 'oral partition' inherently require examination of evidence, the Courts, notwithstanding the falsity of such a plea, are constrained to relegate the parties to trial rather than rejecting the plaint under Order VII Rule 11, CPC, 1908 or altogether dismissing the suit as frivolous, exercising its inherent powers under Section 151 CPC, 1908.*

*It is unsettling how a mere plea of 'oral partition' is abused to infuse life and prolong a purely false and frivolous civil suit which otherwise, deserves to be rejected at the very threshold. It would not be out of place to mention that such ingenious pleas are in fact, often used as a bargaining chip by dishonest litigants to compel their adversaries to succumb to their illegal and unlawful demands.*

*Unfortunately, there is no precedent that can guide the Trial Courts as to how a bald plea of 'oral partition' should be nipped in the bud and parties be saved from the rigmarole of a civil trial. Though there are some judgments that can surely be looked into, however, they do not authoritatively lay down any parameters to prevent abuse in cases of civil actions, premised upon the false plea of 'oral partition'. In 2016, the Hon'ble Delhi High Court, while passing a decree in **Sandeep Kohli and Anr. v. Vinod Kohli and Ors., reported as 2016 SCC OnLine Del 6533** recognized that undoubtedly, a plea of oral partition is an inherently required trial, however, the Court noted that a plea of 'oral partition' based on solemn affirmation of co-ownership and documents executed on oath cannot be countenanced to permit abuse of process of Court.*

*The Hon'ble Delhi High Court in **Chander Mohan Sharma v. Jagdish Prasad Sharma, reported as 2016 SCC OnLine Del 984**, while hearing an appeal from the judgment and decree of the Trial Court, had in reference to the plea of 'oral partition' observed that such a plea can only be permitted in cases where a party establishes any pre-existing right or share in the property. However, this judgment failed to take note of situations where properties are alleged to have been purchased through family funds and purchased in individual names.*

*It was in **Shri Virender Kumar Garg. V. Shri Ravinder Kumar Garg, reported as 2013 SCC OnLine Del 4661**, that the Hon'ble Delhi High Court while hearing an appeal from the Trial Court's order dismissing the suit gave some comprehensive insights to*

*deal with a plea of 'oral partition'. The Court cautioned that a plaint premised upon a plea of 'oral partition' should contain necessary particulars as to how the plaintiff's father bought the suit property out of ancestral property funds, the description of such property, the approximate date, or even year of sale of such property and some particulars of such property. The pleadings must also contain as to how and when the oral partition took place, who were parties to it, and even the approximate month and year when it occurred. The Court essentially laid down that a plea of 'oral partition' can never be a sketchy or vague assertion, but a cogent and clear averment supported by facts. Although the judgments of the Hon'ble Delhi High Court shed some light upon the plea of 'oral partition', they are, however, fact-centric observations that cannot be objectively applied as a uniform proposition of law. It may also be noted that except for the third judgment as mentioned above, others have rejected the plea of 'oral partition' only after the conclusion of a full-fledged trial and have even acknowledged that a plea of 'oral partition' should generally be relegated to trial.*

*It is only recently that the Hon'ble Supreme Court came down heavily upon dishonest litigants resorting to the plea of 'oral partition'. The Hon'ble Supreme Court of India in the case of* ***Vineeta Sharma v. Rakesh Sharma, (reported as (2020) 9 SCC 1)*** *was seized of the question surrounding conflicting interpretations of Section 6(5) of the Hindu Succession Act, 1956 dealing with rights of a daughter in a coparcenary property. Though in relation to Section 6(5), the Hon'ble Court made pertinent observations qua a plea of 'oral partition'. The Court noted:*

*"**135.** …The provisions of section 6(5) are required to be interpreted to cast a heavy burden of proof upon the proponent of the oral partition before it is accepted such as separate occupation of portions, appropriation of the income, and consequent entry in the revenue records and invariably to be supported by other contemporaneous public documents admissible in evidence, may be accepted most reluctantly while exercising all safeguards…. …When such a defence is taken, the Court has to be extremely careful in accepting the same, and only if very cogent, impeccable, and contemporaneous documentary evidence in the shape of public documents in support is available, such a plea may be entertained, not otherwise. We reiterate that the plea of an oral partition or memorandum of partition, unregistered one can be manufactured at any point in time, without any contemporaneous public document needs rejection at all costs…"(emphasis supplied)*

*A perusal of the aforementioned judgments of the Hon'ble Delhi High Court shows that nothing has been authoritatively laid down which can help the Trial Courts in dismissing a dishonest plea of 'oral partition' at the very threshold without relegating the parties to trial. On the other hand, the observations of the Hon'ble Supreme Court lay down certain parameters but fall short of laying down any practice directions for the Trial Courts for in limine dismissal of a plea of 'oral partition', which has otherwise snowballed into a menace. A combined reading of the precedents and keeping in mind the practical considerations, principles which can be culled out for determining the genuineness of a plea of 'oral partition' and its outright dismissal are summarized herein:*

1. *A bald plea of 'oral partition' must be rejected by the Trial Courts at the very threshold and suit should not be allowed to proceed on a mere plea of 'oral partition';*
2. *A plea of 'oral partition' should only be entertained only when a person prima facie establishes any pre-existing right in the suit property;*
3. *A plaint based upon a plea of 'oral partition' should necessarily have specific pleadings clearly enumerating all the facts and circumstances surrounding the factum of oral partition; and*
4. *In no case, should the plea of 'oral partition' be accepted unless accompanied by evidence in the form of public documents such as House Tax Receipts, Electricity Bills, Mutation Entry Records, etc.The aforesaid principles are parameters which the Trial Courts should always keep in mind whenever a plaint founded upon a plea of 'oral partition' is presented before it. Trial Courts should always proceed with caution whenever a plea of 'oral partition' is set up so that innocent litigants are saved from fighting frivolous civil actions. In conclusion, every endeavor must always be made to prevent bogus litigation which only works to scuttle the trust people pose in the Indian judiciary.* ஆக இந்த 3ம் பிரதிவாதி கூறுவது போல வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்வது அதை நிரூபிக்காத நிலையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் எதுவும் ஏற்படவில்லை. எனவே இந்த எழுவினா -2 வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்படுகிறது.

14). <u>எழுவினா 4</u>:-

இந்த வழக்கில் 2006 ஆம் ஆண்டு மாரியப்ப வள்ளலார் ஒரு உயில் எழுதி வைத்து அதன் அடிப்படையில் சொத்துக்கள் தனக்கு பாத்தியம் என்று 3 ம் பிரதிவாதி கூறியுள்ளார். இந்த பிரதிவாதி தரப்பில் உயில் சான்று ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் மேற்படி உயில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முன் வைத்த போது பிரதிவாதி மேற்படி உயில் சாட்சி மூலம் நிரூபிக்க விட்டு விட்டதாக கூறுகிறார். இந்த பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.2 சுப்பிரமணியன் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். சாட்சிய சட்டத்தின் அடிப்படையில் உயில் ஆவணத்தை அதில் சான்றொப்பமிட்ட சாட்சிகள் மூலமே நிரூபிக்க வேண்டும் என்று கூறுகிறது. சுப்ரமணியனை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்கின்றபோது, தன் தகப்பனார் மாரியப்பன் வீட்டில் வேலை பார்த்ததாகவும், அந்த வகையில் மாரியப்பனை தெரியும் என்றும், ,தானும் தனது அப்பாவும் மாரியப்பன் எழுதி வைத்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், ஒரே ஒரு கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளார். மேலும் குறுக்கு விசாரணையின் போது சாட்சி கையொப்பம் சாம்பசிவம் என்பவர் செய்தார் என்றும் , பால் பாயிண்ட் மற்றும் இங்க் பேனாவால் போடப்பட்ட கையொப்பங்கள் வேறுபட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். ஒரு ஆவணத்தில் கையொப்பம் இடப்படும் இங்க் குறித்தோ அதன் நிறம் குறித்தோ எந்தவிதமான தவறும் குறிப்பிட்டு கூற முடியாது. மேலும் ஒரு ஆவணத்தில் எழுதப்பட்ட இங்க் மையினை வைத்து அதனுடைய வயதை ஒப்பிட்டு பார்க்கும் கூடிய அளவிற்கான அறிவியல் பூர்வமான கண்டுபிடிப்புகளும் வரவில்லை. மாரியப்பன் தேவர் ஒரு உயில் எழுதினார் என்றும், அதில் ஒரு கையொப்பம் செய்தார் என்றும் தானும் அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சி கூறியுள்ளார். மேற்படி உயிலில் சொல்லப்பட்ட சொத்துக்களை பார்க்கும் போது வழக்கு அயிட்ட சொத்துக்கள் 5, 7,

17, 18, 20 மற்றும் 22 ஆகிய ஆறு அயிட்ட சொத்துக்கள் உயில் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. உயிலை அனுசரித்து பட்டா எதுவும் மாற்றவில்லை என்று 3 ம் பிரதிவாதி கூறியுள்ளார். மாரியப்ப வள்ளாள தேவர் 2008 இல் இறந்துள்ளார். அவர் இறந்தவுடன் உயில் நடைமுறைக்கு வந்ததாக 3 ம் பிரதிவாதி கூறியுள்ளார். இந்த வழக்கு 2015 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி இந்த பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பில் உயில் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தார். ஆனால் அப்படி எந்த ஒரு பதில் அறிவிப்பும் இந்த 3 ம் பிரதிவாதி அனுப்பியது சம்பந்தமாக வாதி தரப்பில் குறியீடு செய்யவில்லை. மேலும் 3 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்பதற்கான விளக்கமும், ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்ட மேற்சொன்ன வாதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உயிலை பொறுத்தமட்டில் அதில் கண்ட ஒரு சாட்சி மூலமாக 3 ம் பிரதிவாதி நிரூபித்துள்ளார். ஆகவே மேற்படி உயிலில் கண்ட சொத்துக்கள் 3 ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று முடிவு செய்யப்படுகிறது.

15). **<u>எழுவினாக்கள் 1 மற்றும் 5:-</u>**

மேற்கண்ட எழுவினாக்கள் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளதா? என்பதும் வழக்கில் கண்ட 1, 2 மற்றும் 25 வது அயிட்ட சொத்துக்கள் மாரியப்ப வள்ளாளருக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லையென 3 ம் பிரதிவாதி கூறியிருப்பது சரியா? என்பதும் பார்க்க வேண்டி உள்ளது. இந்த வழக்கானது 2015 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 2012 ஆம் ஆண்டு வாதியின் ஒரு சகோதரி பாகப்பிரிவினை கேட்டு 3 ம் பிரதிவாதிக்கு அனுப்பியதை 3 ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கு சொத்துக்கள் வாய் மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு அவரவர் பாகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை 3 ம் பிரதிவாதி நிரூபிக்கவில்லை.

மாரியப்பன் மகள் தான் இந்த வாதி என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மாரியப்பன் எழுதிவைத்த உயில் உண்மை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்திருந்தாலும், உயிலில் சொல்லப்படாத இந்த வழக்கில் கண்ட மற்ற சொத்துக்களை பொருத்தமட்டில் வாதி கூட்டு உடைமையில் இருந்து வருவதாக தான் யூகிக்க முடிகிறது. ஒரு பிரிவினை வழக்கு, சொத்தின் ஒவ்வொரு பகுதியின் உண்மையான உடைமை அனைத்து இணை உரிமையாளர்களாலும் நிரூபிக்கப்பட வேண்டிய அவசியமில்லை, ஆனால் ஆக்கபூர்வமான கூட்டு உடைமை அல்லது கூட்டு உடைமைக்கான முன்பே இருக்கும் உரிமை நிறுவப்பட வேண்டும். "வெளியேற்றம்" (பிரத்தியேக விரோத உடைமை) நிரூபிக்கப்படாவிட்டால், ஒரு இணை உரிமையாளரின் உடைமை அனைத்து இணை உரிமையாளர்களின் சார்பாகவும் சட்டப்பூர்வமாகக் கருதப்படுகிறது. வாதியின் உரிமை அற்றுப் போய்விட்டது என கூறும் 3ம் பிரதிவாதி அதை நிரூபிக்கவில்லை. ஆகவே வழக்கு சொத்து உயில் மூலம் 3ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்களைத் தவிர மற்ற சொத்துக்கள் அனைத்தும் வாதி பிரதிவாதிகளின் கூட்டு அனுபவித்து தான் இருந்து வருகிறது என்று முடிவு செய்யப்படுகிறது. வழக்கில் கண்ட 1, 2 மற்றும் 25வது ஐட்ட சொத்துக்கள் மாரியப்ப வள்ளாளருக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லை என்று 3ம் பிரதிவாதி கூறியுள்ளார். ஆனால் அது சம்பந்தமான எந்த விதமான ஆவணங்களும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. வாதி தாக்கல் செய்யாமல் இருந்தாலும் கூட தன் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொத்து விவரங்களை கூறி வாதி தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த சொத்துக்கள் 3ம் நபர்களுக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு கூறும் பிரதிவாதி அது 3ம் நபர்கள் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் அது சம்மந்தமாக எந்வொரு ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை. எனவே மேற்கொண்ட சொத்துக்கள் குறித்து எந்த சாட்சிகளும் விசாரிக்க முன்வராத நிலையில் 3 ம் பிரதிவாதி வாதம் ஏற்புடையதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

**16). <u>எழுவினா 6:-</u>**

இந்த எழுவினாவில் கண்டபடி வாதிக்கு வழக்குச் சொத்தில் 1/10 பாகம் கிடைக்கக்கூடியதா? என்பதாகும். அதை பொருத்து வாதி முதல் நிலை தீர்ப்பு பெற தகுதியுடையவரா? என்றும் தீர்மானிக்கப்பட வேண்டிய உள்ளது. இந்த வழக்கை பொருத்தமட்டில் பி.வா.சா.ஆ.6 உயில் 3 ம் பிரதிவாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்த உயிலில் கண்ட வழக்கு சொத்துக்கள் ஐட்டம் நம்பர் 5, 7, 17, 18, 20, 22 ஆகிய சொத்துக்கள் 3 ம் பிரதிவாதிக்கு வாதிக்கு உயில் மூலம் கிடைத்த தனி சொத்துக்கள் என்று முடிவு செய்யப்படுகிறது. ஏனென்றால் மேற்கண்ட சர்வே நம்பர் பொறுத்தவரை மாரியப்பன் பெயரில் தான் தனிப்பட்டா இருந்துள்ளது. பட்டா ஒரு உரிமை வைப்பு ஆவணமாக இல்லாவிட்டாலும் கூட மாரியப்ப வள்ளாள தேவர் தன் தகப்பனார் என்றும், தன் பெயருக்கு உயில் எழுதி வைத்ததாகவும் தெரிவித்து, அந்த உயில் சாட்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட வழக்கு அயிட்ட சொத்து 5, 7, 17, 18, 20 மற்றும் 22 ஆகிய சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களை பொறுத்து இந்த வாதிக்கும், 5 ம் , 7 ம் மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கும் தலா 1/10 பாகம் உள்ளது என்று முடிவு செய்யப்படுகிறது.

**17). <u>எழுவினா 7:-</u>**

வாதிக்கு கூடுதலாக ஏதேனும் பரிகாரம் வழங்க வேண்டிய உள்ளதா? என்று பார்க்கின்ற போது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட பரிகாரங்களை போதும் என்றும் , கூடுதலாக எந்தவொரு பரிகாரமும் வழங்க வேண்டிய அவசியமில்லை என்றும் முடிவு செய்கிறது.

**18)** இறுதியாக,

1) வாதியின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

3) வழக்கு சொத்து விபரத்தில் கண்ட 5, 7, 17, 18, 20 மற்றும் 22 ஆகிய ஆறு அயிட்ட சொத்துக்களில்இந்த வாதிக்கோ, 5 ம், 7 ம், மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கோ எந்த பாகமும் கிடைக்ககூடியதல்ல என்றும், மேற்கண்ட அயிட்ட சொத்துக்களை பொறுத்து வாதி மற்றும் 5 ம், 7 ம், மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கான வழக்கு முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

4) தாவா அயிட்ட சொத்துக்களில் 1 முதல் 4 , 6 , 8 முதல் 16, 19, 21, 23 முதல் 25 ஆகிய அயிட்ட சொத்துக்களில் இந்த வாதிக்கும், 5, 7,8 பிரதிவாதிகளுக்கும் தலா 1/10 பாகம் உள்ளது என்று முதல்நிலை தீர்ப்பாணை வழங்கப்படுகிறது.

5) வழக்கில் கண்ட 3 ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களில் வாதிக்குரிய சட்டப்படியான பாகத்தை இன்றிலிருந்து 30 தினங்களுக்குகள் நலஇளப்பம் சரிகட்டி பிரித்து ஒப்படைக்க வேண்டியது, தவறும்பட்சத்தில் வாதி முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணைக்கு விண்ணப்பிக்கலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

6) தரப்பினர்களின் உறவு முறைகளை அனுசரித்து செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.03.12 19:42:47 +0530

சார்புநீதிபதி,

மன்னார்குடி.

**பின் இணைப்பு:-**

1. **வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

வா.சா.1 அருண்மொழி (வாதி)

வா.சா.2 அண்ணாதுரை

2. **வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.02.2015 | சிட்டா (12 எண்ணம் ) | நகல் |
| வா.சா.ஆ.2 | 25.02.2015 | அடங்கல் பதிவேடு | நகல் |
| வா.சா.ஆ.3 | 28.11.1969 | வாதியின் தகப்பனாருக்கு அவருடைய சகோதரர் சாம்பசிவ வள்ளால தேவர் எழுதிக்கொடுத்த பினாமி பாத்திய விடுதலை பத்திரம் | சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.4 | 18.03.2008 | வாரிசுரிமை சான்று | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 27.02.2015 | வாதி பாகம் கேட்டு தன் குடும்ப உறுப்பினர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | --- | 5 ம் மற்றும் 6 ம் பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.7 | ---- | 2 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வந்த கவர் | அசல் |

3. **பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

பி.வா.சா.1 மோகன்தாஸ்

பி.வா.சா.2 சுப்ரமணியன்

**4. <u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 07.09.2016 | சித்தமல்லி கிராமத்திலுள்ள பட்டா எண்.769-ல் வாதி மற்றும் அவரது சகோதரிகள் பெயரில் வழங்கப்பட்ட சிட்டா | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 26.09.2016 | பட்டா எண்.769, 1396 பசலிக்கு வாதிக்கு வழங்கப்பட்ட சிட்டா | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 07.09.2016 | பட்டா எண்.496-ல்1426 பசலிக்கு 3 ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட சிட்டா எண்ணிக்கை -2 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 07.09.2016 | பட்டா எண்.573-ல்1426 பசலிக்கு 3 ம் பிரதிவாதியின் சகோதரர் காலஞ்சென்ற ரெத்தினகுமார் பெயருக்கு வழங்கப்பட்ட சிட்டா | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 07.09.2016 | பட்டா எண்.464-ல் 1426 பசலிக்கு 3 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்ட சிட்டா | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 10.03.2006 | மாரியப்ப வள்ளால தேவர்அவர்காளல் எழுதி வைக்கப்பட்ட உயில் ஆவணம் | அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 15.05.1987 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் நீலா ஆச்சி அவர்களுக்கு வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தக கடன் ஏற்படுத்தியதற்கான பதிவு செய்யப்பட்ட முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.547/1987) | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | 22.06.1987 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் சுப்ரமணிய செட்டியார் அவர்களிடம் வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தக கடன் ஏற்படுத்தியதற்கான பதிவு செய்யப்பட்ட | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.548/1987) | |
| பி.வா.சா.ஆ.9 | 05.01.1989 | மாரியப்ப வள்ளாலதேவர் அவர்களால் சுப்ரமணிய செட்டியார் அவர்களிடம் வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்களை பெந்தக கடன் ஏற்படுத்தியதற்கான பதிவு செய்யப்பட்ட முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.385/1989) | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 13.03.2016 | சுப்ரமணியன் அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகடன் வரைவு ரசீது முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.260/2016) | அசல் |
| பி.வா.சா.ஆ.11 | 13.03.2016 | சுப்ரமணியன், அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகடன் வரைவு ரசீது முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.261/2016) | அசல் |
| பி.வா.சா.ஆ.12 | 13.03.2016 | சுப்ரமணியன், அம்பிகா அம்மாள் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பெந்தகடன் வரைவு ரசீது முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.262/2016) | அசல் |

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.03.12 19:42:59 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.